உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 2 July 1940. No. 8

## விஷய சூசிகை.


| | பக்கம் |
|---|---|
| ஐந்திரி ரஸாயனம் (பத்திராதிபர்) | 1—4 |
| பிளட் பிரஷர் | 5—9 |
| (கரூர், பண்டிட், P. S. ராமசர்மா அவர்கள்) | |
| பண்டிட் மாளவியா அவர்களும் காயகல்பமும் | 10—25 |
| (பண்டிட் நாராயணய்யங்கார் எழுதியது) | |
| சுதேச வைத்யம் பூர்ணமானதா? | 25—28 |
| (பண்டிட் நாராயண அய்யங்கார் எழுதியது) | |



| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher.
No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0


7 AUG 1940 MADRAS

3L
L:5ணவ11,ய12ஸ
N40.2.8.
210186.

குழந்தைகளுடைய ஆரோக்கியம் முதலியவை
களுக்குஇன்றியமையாத

# ப ய ஸ் ய ா

ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜசாஸ்திரிகள் அவர்களால் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப் பட்டது.

**பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அவசிய மானஓர் சிறந்த ரஸாயனம்.**

*இது தாய்ப்பாலின் அளவையும், ஜீவ ஸத்துக்களையும், மிகுதியாக விருத்தி செய்வதுடன் குழந்தைகளுக்குப் புஷ்டி, பலம், ஆரோக்கியம் முதலியவைகளையும் பூர்ணமாய் அளிக்கிறது. உபயோகிக்கும் விதம் முதலியவை ரஸாயனத்துடன் அனுப்பப்படும்.* விலை ரூபாய் **2-4-0** தான்

தபால் செலவு வேறு

கிடைக்குமிடம்:—

**ஆத்ரேய ஆயுர்வேத ஒர்க்ஸ்,**

தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.

## Ind-Iodine

**For Indians**

—o—

The new Ayurvedic Substitute for Tr. Iodine. Absolutely reliable and quick in effect for Wounds, Cuts, Abrasions and Swellings.

Stockists wanted everywhere.

The Ayurvedic Gompound Tinctuers Ltd.

Trivandrum.

# ஐந்திரீ ரஸாயனம்.

## (பத்திராதிபர்)

சுதேச வைத்திய நூல்களில் **ரஸாயனம்** என்று ஓர் அத்தியாயம் காணப்படுகின்றது. ரஸாயனம் என்ற வடமொழிக்குக்காய கல்பம் என்பது பொருள். "லாபோபாயோ ஹி சஸ்தாநாம் ரஸாதீநாம் ரஸாயனம்" என்று சரகஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. ரஸம் முதலிய ஸப்ததாதுக்களும் சீராக அமையப்பெறுவதற்குக்காரணங்களாக உள்ளவை ரஸாயனங்களாகும். ரோகத்தாலேயாவது வயது முதிர்ச்சியாலோ சரீரத்திலுள்ள ரஸாதி தாதுக்கள் க்ஷீணதசையை யடையும்பொழுது ரஸாயன மருந்துகளின் ஸேவையால் அத்தாதுக்கள் சீர்பட்டு ஆரோக்யமுள்ள வாலிபனுக்கு அமைவதுபோல் அவை அமைகின்றனவென்பது சாஸ்திரக்கொள்கை. தற்காலத்தில் ரஸாயனங்கள் அல்லது காயகல்பங்கள் உபயோகித்துப்பயன் பெறுபவர் கிடையாதென்றே சொல்லலாம். பொதுமக்களுக்கு ரஸாயன முறைகளில் நம்பிக்கைக் குறைவும் அதன் காரணங்களுள் ஓர் முக்கிய காரணமாகும். முன் காலத்தில் ரஸாயன முறைகளை உபயோகித்து வந்ததாகப்பல அத்தாக்ஷிகள் காணப்படுகின்றன. அது மாத்திரமின்றி சமீபகாலத்தில் காசியில் பண்டிட் மாளவியா அவர்கள் ரஸாயன முறையை உபயோகித்துப் பலனடைந்ததாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். பலர் கண் கூடாகவும் கண்டனர். நூல்களில் ரஸாயன முறைகளுக்குச் சொல்லியுள்ள பூர்ண பலனை அன்னார் அடையாவிட்டாலும் ஓரளவு பலன் கிடைத்ததென்பது மறுக்கமுடியாத விஷயம். ஆகவே நூல்களில் கூறியுள்ள ரஸாயன முறைகளை விதண்டாவாதம் செய்து தூற்றுவது மடமையாகும். ரஸாயனங்களில் இரு பேதங்கள் காணப்படுகின்றன. தனி மூலிகைகளால் செய்யப்படும் ரஸாயனம் அவற்றுள் ஓர் பேதம். பஸ்மசிந்தூரங்களால் செய்யப்படுவது இரண்டாவது பேதம். அவற்றுள் முதல் பேதத்தில் பல மூலிகைகள் நூல்களில் கூறப்பட்டபோதிலும் நெல்லிக்கனியே மிகவும் போற்றப்படுகின்றது. "ஆமலகம் வயஸ்தாபநாநாம்" என்று சரகத்தில் கூறப்படுகின்றது. வயதின் முதிர்ச்சியைத் தடுப்பதில் நெல்லிக்கனி நிகரற்றது என்பது அதன் பொருள். நெல்லிக்கனி பலவிதமாக ரஸாயன முறைகளில்

சேருகின்றது. பண்டிட் மாளவியா அவர்களும் அவர் நண்பரும் நெல்லிக்கனியை ஓர்விதமாகப் பக்குவப்படுத்தி அதையே உபயோகித்தனர். ச்யவனப்பிராசம் என்பதும் முக்கியமாக நெல்லிக்கனி சேர்ந்த ஓர் ரஸாயனமுறையே. சென்னையில் வசிக்கும் ஓர் பிரபல மலையாள வைத்தியர் ச்யவநப்ராசத்தை Sexual stimulant அதாவது காமவெழுச்சியை யுண்டுபண்ணும் மருந்தென்றும், இம்மருந்தைச் சாப்பிட்டு ச்யவநர் என்ற முனி தாதுபுஷ்டி யடைந்தாரென்றும், ஆகவே இம்மருந்தைப் பொதுவாக உபயோகிக்கலாகாதென்றும் அபிப்பிராயம் கொண்டதாக அறிகிறோம். இவ்வபிப்பிராயம் சாஸ்திரக்கொள்கைக்கும், அனுபவத்திற்கும் மிக விருத்தமானது. காம எழுச்சியை உண்டுபண்ணும் மருந்துகளுக்கு வாஜீகரணமருந்துகள் அல்லது தாதுபுஷ்டி மருந்துகளெனப்பெயர் கொடுக்கப்பட்டு அவைகளுக்குத்தனித்த அத்யாயமும் நூல்களில் ஒதுக்கப்பட்டுள்ளது. ச்யவனப்ராசம் ரஸாயநாத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர காமவெழுச்சியை யுண்டுபண்ணும் மருந்துகள் சுக்ர விரேசகம், சுக்லவர்த்தகம் என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சுக்ல விரேசக மருந்துகளை உபயோகித்தால் அவை சரீரத்தில் ஏற்கனவே யிருக்கும் சுக்லத்தை அடிக்கடி எழுச்சிமூலம் வெளிப்படுத்தும். இவ்வகை மருந்துகள் பிற்காலத்தில் சரீரத்திற்கு பாதகத்தை விளைவிக்கும். சுக்ல வர்த்தக மருந்துகள் சரீரத்தில் சுக்லத்தை அதிகமாக விருத்திசெய்து ஆனந்தத்தை யளிக்கும் சுபாவமுள்ளவை. ச்யவனப்பிராசம் இவ்விரு வகைகளில் எந்த வகையையும் சேர்ந்ததில்லை. ச்யவனருக்கு இம்மருந்தால் தாதுபுஷ்டியுண்டானதாக நூல்கள் கூறுவதற்குக் காரணம் அவர் அடைந்தவாலிபத்தன்மையே. இம்மருந்தால் வாலிபத்தன்மை யடைந்து வாலிபத்தன்மையால் சம்பவிக்கும் சுகங்களை யடையப்பெற்றார். ஆகவே இது ரஸாயன குணமுள்ளதாகையால் அனைவரும் உபயோகிக்கக்கூடிய குற்றமற்ற மருந்தாகும்.

**ஐந்திர ரஸாயனம்** என்பதும் சரகஸம்ஹிதையில் ரஸாயநாத்யாயத்தில் மூன்றுவது பாதத்தில் சொல்லப்பட்ட ஓர் ரஸாயன மருந்தாகும். ரஸாயன மருந்துகளால் சரீரத்திற்கு இளமைப்பருவம் வருவதுடன் சில அஸாத்ய ரோகங்களும் நிவர்த்தியாகின்றன.

ரோகங்கள் அசாத்ய நிலைமை யடைந்துவிட்டால் அப்பொழுது ரஸாயன மருந்துகளால் சிகித்சை செய்யவேண்டுமென்பது சாஸ்திர சம்மதம். ஐந்திரி ரஸாயனமும் அவ்விதமே சில அஸாத்ய ரோகங்களையும் நிவர்த்திக்கும் சக்திவாய்ந்தது. இந்த ரஸாயனத்தில் மொத்தம் சரக்குகள் பதினொன்று. அவையாவன—ஐந்திரி, மத்ஸ்யாக்ஷகம், பிராஹ்மீ, வசா, பிரம்மஸுவர்ச்சலா, பிப்பலீ, லவணம், சங்கபுஷ்பீ, ஸ்வர்ணம், விஷம், கிருதம், இவைகளுக்குத் தமிழ்ப்பெயர்களாவன—பேய்க்கொம்மட்டி, பொன்னாங்காணி, பிரம்மி, வசம்பு, பிரம்மஸுவர்சலா, திப்பிலி, இந்துப்பு, வெள்ளைக்காக்கணட்டான், தங்கரேக்கு, வத்ஸநாபிக்கிழங்கு, பசுநெய், இவற்றில் பேய்க்கொம்மட்டியின் வேரை எடுத்துக்கொள்ளவேண்டும். பிரம்மஸுவர்சலா என்பது ஸூர்யஸுவர்சலா என்பதின் ஓர் பேதமெனத் தெரிகிறது. ஸூர்யஸுவர்சலா என்பது சூரியகாந்தச்செடி, அச்செடியின் புஷ்பம் சூரியன் இருக்கும் திக்கை நோக்கியிருக்குமாதலால் அதற்கு சூர்யபக்தா என்றும் பெயர் உண்டு. வெள்ளைக்காக்கணட்டான் கொடியில் வேரை எடுத்துக்கொள்ளவேண்டும். தங்கத்தை பஸ்மசிந்தூரம் செய்யாமல் அப்படியே சேர்க்கவேண்டும். பேய்க்கொம்மட்டி முதலான எட்டு சரக்குகள் வகைக்கு மூன்றுயவம் இடை எடுத்துக்கொள்ளவேண்டும். தங்கரேக்கு இரண்டுயவம், பசுநெய் தோலா 4, நாபிக்கிழங்கு, ஒரு திலம் இடை, எடுத்துக்கொள்ளவேண்டும். யவம் என்பது மாஷம் என்ற அளவில் நான்கில் ஒரு பாகம். அதாவது மாஷம் என்பது $\frac{1}{16}$ தோலா அல்லது 11¼ கிரெயின்சு இடையுள்ளது. ஆகவே யவம் என்பது சுமார் மூன்று கிரெயின்சு இடையுள்ளதாகும். முன் சொல்லிய எட்டு சரக்குகளும் வகைக்கு 9 கிரெயின்சும், தங்கரேக்கு 6 கிரெயின்சும், நாபிக்கிழங்கு ஓர் எள்ளுப்பிரமாணமும் எடுத்து நன்றாக அரைத்து நான்குதோலா பசு நெய்யில் கலக்கி காலையில் சாப்பிடவேண்டும். இவ்விதம் பிரதி தினம் புதிது புதிதாகத் தயார்செய்து சாப்பிடவும். மருந்து ஜீர்ணமானபிறகு பசுநெய் மிகுந்த அரிசி சாதம் தேனுடன் பத்தியம் சாப்பிடவேண்டும். இது ரஸாயன குணங்களைக் கொடுப்பதுடன் குஷ்டம், வெண்குஷ்டம், வாதநோய்கள், முதலியவற்றையும் விலக்கும். மூளையைப்பற்றின வியாதிகள் தீரும். புத்தி சக்தியை அதிகப்படுத்

றும். இம்முறை அஷ்டாங்க ஹிருதயத்திலும் இவ்விதமே வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. மருந்தை உபயோகிப்பதில் காலவளவு ஒரு வருஷமென அஷ்டாங்கஹிருதயம் கூறுகின்றது. இம்முறையில் சேரும் சுவர்ணம் அப்படியே ரேக்காக சேர்க்கவேண்டுமா அல்லது பஸ்மம் சிந்தூரம் செய்து சேர்க்கவேண்டுமா என்பது ஓர் பிரச்னை. பஸ்மம் அல்லது சிந்தூரம் செய்தே சேர்க்கவேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். அது சாஸ்திர விருத்தம். சுவர்ணத்தைப்பச்சையாக சேர்த்துப் பல ரஸாயன முறைகள் அஷ்டாங்க ஹிருதயத்தில் வியக்தமாகச் சொல்லப்படுகின்றன. ஐந்திரீ ரஸாயனத்திற்கு முந்தின "யந்நாலகந்த" என்ற சுலோகத்தில் சொல்லப்படும் சது: குவலயம் என்ற ரஸாயனத்தில் "ஸஹிரண்யபத்ரம்" என்று சுவர்ண ரேக்கை அப்படியே சேர்த்துச் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்கு முந்தின பஞ்சாரவிந்தம் என்ற ரஸாயனத்திலும் "ஸஹேமசகலம்" என்று தங்கரேக்கை அப்படியே சேர்க்கும்படி வியக்தமாகக் காணப்படுகின்றது. ஆகவே அதுபோல இவ்விடத்திலும் ரேக்கை உபயோகிப்பதுதான் பொருத்தமாக ஆகும். பச்சையாகச்சேர்ப்பதைவிட பஸ்மசிந்தூரம் செய்து சேர்ப்பது நல்லது தானே என்ற கேழ்வி மிகவும் அசம்பாவிதம். "ரிஷயஸ்த்வேவ ஜாநந்தி யோகஸம்யோகஜம் பலம்". இதன் பொருள்—இரண்டு அல்லது அதிகமான சரக்குகளைச்சேர்ப்பதால் உண்டாகும் குணங்கள் முனிகளுக்குத்தான் புலப்படும். நம்போன்றவர்களுக்கு அது புலப்படாது. ஆகையால் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வழியைப்பின்பற்றி நடப்பது குற்றமற்றதாகும். இதுபோன்ற விஷயங்களில் நமது யுக்தி பயன்படாது என்பதே. ஆகவே ஐந்திரீ ரஸாயனத்தில் தங்கரேக்குகளை அப்படியே சேர்த்து தினந்தோறும் புதிதாகத் தயார்செய்து உபயோகிப்பது சாஸ்திர சம்மதம்.

# பிளட் பிரஷர்.

(கரூர் பண்டிட் P. S. ராமசர்மா அவர்கள் எழுதியது)

முன் சஞ்சிகையின் 8-வது பக்கத்தொடர்ச்சி.

அதிகப்பிரஷருடன்வேலை செய்யவேண்டியதாகின்றது. இயற்கைக்கு அதிகமான பிரஷருடன் ஹிருதயம் வேலைசெய்யும்பொழுது நாளடைவில் ஹிருதயம் துர்பலமாகின்றது. சாதாரணமாக நடக்கும் ஓர் குதிரையை சவுக்கு முதலியவைகளால் அடித்து அதிகமாக ஓடும்படி செய்தால் அது சிலகாலம் சக்திக்கு மீறி ஓடி கடைசியில் பலமிழந்து மூர்ச்சித்து விழுவதுபோல ஹிருதயமும் உசிதமான சக்தியை மீறி வேலைசெய்யும்பொழுது கிரமமாகச் சோர்வடைந்து வேலைசெய்யாமல் நின்றுவிடுகின்றது. ஆகவே இந்நோயில் ரக்த ஓட்டத்திற்குத் தடைபடும்படி ரக்தக்குழாய்களில் உண்டாகும் பிரதிபந்தகமே காரணமாகின்றது. இப்பிரதிபந்தம் சிலருக்கு வார்தக்யத்தால் காணுகின்றது. ஆகார தோஷங்களால் ரக்தக்குழாய்களின் உள்பாகங்களில் சில வஸ்துக்கள் பாசம்போல படிந்து கடித்து காலக்கிரமத்தில் ரக்தக்குழாய்களின் இளகிய தன்மையையும் கெடுத்து ரக்தக்குழாய்களின் துவாரத்தைக் குறுகும்படி செய்துவிடுகின்றன. இவ்விதம் ரக்தக்குழாய்களில் சில இடங்களில் துவாரம் குறுகிவிடுவதால் குறுகின இடங்களில் ரக்தம் தாராளமாகப்போகாத காரணம்பற்றி ஹிருதயம் இயற்கைக்கு அதிக வேகத்துடன் வேலை செய்து அவ்விடங்களில் ரக்தத்தை ஓடும்படி செய்கின்றது. இதைத்தான் பிளட்பிரஷர் என்கின்றனர். பிளட்பிரஷர் என்பது ஓர் வியாதியாகாது. ஏனெனில் ஓரளவு பிரஷர் இயற்கையான ரக்த ஓட்டத்திற்குத் தேவையாக இருக்கின்றது. ஆகவே அதிகமான பிரஷருடன் ஹிருதயம் வேலைசெய்வதுதான் வியாதியாகும். ஆகவே பிளட்பிரஷர் என்று பொதுவாகச்சொன்னபோதிலும் அதிகமான பிளட்பிரஷர் என்று கொள்ளவேண்டும். இந்த அதிகமான பிளட்பிரஷர் போலவே குறைந்த பிளட்பிரஷர் என்பதும் உண்டு. அதில் ஹிருதயம் இயற்கைக்குக்குறைந்த அளவு பிரஷருடன் வேலை செய்யும். அப்பொழுது நாடிகளில் ரக்த ஓட்டம் நிதானமாக இருக்கும். இதுவும் ஓர் வியாதியே. இதில் பிரஷர் இயற்கையான

வுக்கு உயரும்படி மருந்துகள் உபயோகிக்கவேண்டும். அதிக பிரஷரில் பிரஷர் தணியும்படி மருந்து உபயோகிக்கவேண்டும். இந்த பிரஷர் இருவிதமாக இருக்கின்றது. அதாவது ஹிருதயம் சுருங்கும்பொழுது ஓர் அளவு பிரஷருடன் சுருங்குகின்றது. அது விரியும்பொழுது ஓர் அளவு பிரஷருடன் விரிகின்றது. ஹிருதயம் சுருங்கும்பொழுது அதிக பிரஷருடனும் விரியும்பொழுது குறைந்த பிரஷருடனும் வேலைசெய்கின்றது. இந்த இரு பிரஷர்களும் வயதிற்குத்தக்கவிதமாக மாறுபடுகின்றது. அதாவது—

| வயது | சுருங்கும் பிரஷர் | விரியும் பிரஷர் |
|---|---|---|
| 20 முதல் 40 வரை | 112 முதல் 125 வரை | 65 முதல் 70 வரை |
| 40 ,, 60 ,, | 125 ,, 135 ,, | 80 ,, 85 ,, |
| 60 ,, 80 ,, | 135 ,, 165 ,, | 85 ,, 90 ,, |

இப்பிரஷரை கணக்கிட நவீன சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது, இந்நோய்க்குச்சில காரணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. வயதின் பிற்பகுதியில் அனேகமாக இந்நோய் காணுகின்றது. ரக்தக்குழாய்களில் சில பாகங்களில் அல்லது பல பாகங்களில் ரக்தசத்து தங்கி பதிந்து காலக்கிரமத்தில் அக்குழாய்களின் மிருதுத்தன்மையைக் குறைத்து கடினமாக்கி துவாரத்தைக்குறுகச்செய்து ரக்த ஓட்டத்திற்குத் தடையைச்செய்கின்றது. குறுகின துவாரங்களில் ரக்தத்தைச் செலுத்துவதற்காக ஹிருதயம் இயற்கைக்கு அதிகமான பிரஷருடன் வேலை செய்யவேண்டியதாகின்றது. இதுதான் பிளட்பிரஷர் எனப்படுகின்றது. இயற்கைக்கு அதிகமான பிரஷருடன் வேலைசெய்தால் ஹிருதயம் சில காலத்திற்குள் ஓய்ந்து வேலையே செய்யமுடியாமல் நின்றுவிட ஹேதுவாகும். தலைக்கிறுகிறுப்பு, பலக்குறைவு, படபடப்பு, முதலியன இந்நோயின் குறிகளாகும்.

இவ்வியாதியைக்கண்டு நடுங்காத வைத்தியர்கள் கிடையாதெனலாம். உண்மையில் இந்நோய்க்குத்தகுந்த பரிகாரத்தை இது வரை கண்டுபிடிக்காததே பயத்திற்குக் காரணமாகும். இந்நோயின் கிரமத்தை யறிந்துகொள்வதில் ஆங்கில வைத்தியர்கள் காட்டும்ஊக்கம் சிகிச்சையில் அவர்களுக்கு இருப்பதில்லை. ஆனால் நமது சுதேச

நூல்கள் வியாதிகளின் கிரமத்தில் அதிக கவனம் செலுத்தாமல் அதை அசாரமெனத்தள்ளி சிகித்சையில் முழு கவனத்தையும் செலுத்துகின்றன. சுதேச நூல்கள் வியாதிகளின் காரணத்தைக் கொண்டே வியாதிகளின் பெயர்களைச் சொல்லுகின்றன. ரக்தக் குழாய்களில் குற்றம் நேரிடின் ரக்த ஓட்டத்திற்குத் தடையுண்டாகி ரக்தம் சரீரமுழுவதும் செல்லுவதற்காக ஹிருதயம் அதிக பலத்துடன் வேலைசெய்யவேண்டியதாகின்றது. கால்வாய்களில் நீரோட்டத்தில் நடுவில் கல் முதலியவைகளால் சற்று தடை ஏற்பட்டால் அத்தடையை மீறி ஜலம் ஓடுவதற்காக ஏற்றச்சால் அதிக வேலை செய்யவேண்டியதாகின்றது. அதுபோலவே குழாய்களில் உள்ள தடையை மீறி ரக்தம்செல்ல ஹிருதயம் அதிக பலத்துடன் வேலை செய்யவேண்டியதாகின்றது. அவ்விதம் குழாய்களில் தடை ஏற்படாவிடில் ஹிருதயம் இயற்கையான பலத்துடன் வேலைசெய்கிறது. ஆகவே இந்நோய் ரக்தக்குழாய்களின் தடையையொட்டி ஏற்படுகின்றதென்பது நிர்விவாதம். ரக்தக்குழாய்களில் இவ்வித தடைக்குக்காரணமான தோஷங்கள் உண்டாகுமென்பதை நமது நூல்கள் விவரித்திருக்கின்றன. ரக்தக்குழாய்களில் உண்டாகும் தோஷம் அல்லது குற்றங்களுக்கு வாயுவே முக்கிய காரணம். சரகத்தில்—"உத்ஸாஹோச்வாஸ நிச்வாஸ சேஷ்டா தாதுகதிஸ்ஸமா—ஸமோமோக்ஷோ கதிமதாம் வாயோ:கர்மாவிகாரஜம்" எனக் கூறப்பட்டுள்ளது. இதின் பொருள்—"சரீரத்தில் வாயு இயற்கையான தொழிலைச்செய்தாவதால் அப்பொழுது அடியில் வரும் விஷயங்கள் சரீரத்தில் ஒழுங்காக நடைபெறும். உத்ஸாஹம்—காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கமும் முயற்சியும். உச்வாஸ நிச்வாஸ—பிராணவாயுவை உள்ளே இழுப்பதும் வெளிவிடுவதும். சேஷ்டா—இந்திரிய வியாபாரங்கள். தாதுகதிஸ்ஸமா—ரஸம் முதலிய ஸப்த தாதுக்களின் கதியை ஒழுங்காக நடைபெறச் செய்வது. ஸமோமோக்ஷோ கதிமதாம்—சரீரத்தில் சலன ஸ்பாவமுள்ள வஸ்துக்களை ஒழுங்காக வெளியேற்றுவது. ஆகிய இவை விகாரத்தை யடையாத வாயுவின் தொழில்களாம்," ஆகவே விகாரத்தை யடையாமல் இயற்கை நிலையிலுள்ள வாயுவே எல்லா நாடிகளிலும் சரீரத்திற்கு இன்றியமையாத முற்கூறிய தொழில்களை ஒழுங்காக நடைபெறும்

படி செய்கின்றது. அவ்விதமின்றி வாயு விகாரத்தை யடைந்தால் ஸப்த தாதுக்களின் க்ரியையும் பாதிக்கின்றது. (ஸப்த தாதுக்கள் என்பது ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்லம் ஆகிய இவைகள்) அதாவது ரக்த ஓட்டத்தை பாதிக்கின்றது. வியானம் என்ற வாயு விகாரத்தை யடைந்தால் ரக்தக்குழாய்களில் ரூக்ஷம் என்ற நிலைமையை யுண்டுபண்ணுகின்றது. அதாவது ரக்தக்குழாய்களில் ஸ்நிக்தம் என்ற நிலைமையிருந்தால்தான் அவை நெகிழ்ந்து (elasticity) கொடுக்கும் தன்மை பொருந்தியவைகளாகவிருக்கும். அந்நிலைமைக்கு முற்றிலும் விருத்தமான ரூக்ஷம் என்ற நிலைமையை யடைந்தால் ரக்தக்குழாய்கள் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை யிழந்து விரைப்பு (stiffness) என்ற தன்மையை யடைகின்றன. இப்புதிய தன்மையால் ரக்த ஓட்டம் மாறுபடுகின்றது. ரக்தத்திலுள்ள சில அணு விசேஷங்கள் அவ்விடங்களில் தங்குகின்றன. பிறகு காலக்கிரமத்தில் அவை அவ்விடங்களைப்பற்றி படிந்துகடித்து துவாரத்தைக்குறைக்கி நெகிழும் தன்மையை முற்றிலும் கெடுத்துவிடுகின்றன. சுச்ருதத்தில் அடியில் காணுமாறு கூறப்படுகின்றது—க்ருத்ஸ்ந தேஹ சரோவ்யாந: ரஸஸம்வஹநோத்யத: | ஸ்வேதாஸ்ருக் ஸ்ராவணைச்சாபி பஞ்சதா சேஷ்டயத்யபி | இதன் பொருள்—"வியானம் என்ற வாயு சரீரமுழுவதும் வியாபித்துள்ளது. ரஸ தாதுவை சரீர முழுவதும் செலுத்துகின்றது. வியர்வை, ரக்தம்: இவைகளைப் பெருகச்செய்கின்றது." ரக்த ஓட்டத்திற்கு ஹிருதயத்தின் சங்கோச விகாஸங்கள் காரணமாவதுபோல ரக்தக்குழாய்களின் சங்கோச விகாஸங்களும் காரணமாகின்றன. ஹிருதயத்தின் ஸங்கோச விகாஸங்களுக்குப் பிராணவாயு காரணமாகின்றது. அவ்விதமே ரக்தக்குழாய்களின் ஸங்கோச விகாஸங்களுக்கு வியானவாயு காரணமாகின்றது. வியானவாயு காரணமென்பதை "ரஸ ஸம்வஹந வோத்யத: என்றும் ஸ்வேதாஸ்ருக்ஸ்ராவண:" என்றும் வசனங்கள் கூறுகின்றன. பிராணவாயுவின் தொழிலை "ஹிருதயேந்திரிய சித்த த்ருக்" என்ற வசனம் கூறுகின்றது. "வயோஹோ ராத்ரி புக்தாநாம் தேந்த மத்யாதிகா: க்ரமாத்" என்று வாக்படர் கூறுவதுபோல வயதின் பிற்பகுதியில் வாயுப்பிர

கோபம் ஏற்படுவது இயற்கையாகையால் இந்நோயும் அக்காலத்தில் வருவதாக ஆங்கிலர்கள் கூறுவதும் பொருத்தமாகின்றது. காரண விசேஷங்களால் பிராண வியானவாயுக்கள் பிரகோபத்தை யடைந்து முற்சொல்லிய நிலைமை ஏற்படுமாகில் வாலிபதசையிலும் இந்நோய் காணக்கூடும். வாயுக்கள் பிரகோபத்தை யடைவதற்கு ஆகார தோஷங்கள் காரணமாகின்றன. ஆகவே இந்நோயில் வாயுப்பிர கோபம் காரணம். ரக்தமும் விசேஷித்து ரக்தக்குழாய்களும் தூஷ்யங்கள். ரக்தக்குழாய்கள் முதலிய ஸ்ரோதஸ்ஸுக்கள் கெடுவதற்குக்காரணம் அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. "ஆஹாரச்ச விஹாரச்ச யஸ்யாத் தோஷகுணைஸ்ஸம: | தாதுபிர் விகுணேயச்ச ஸ்ரோதஸாம் ஸப்ரதூஷக:" இதன்பொருள்—"வாத பித்த கபங்கள் என்ற திரிதோஷங்களின் குணங்களுக்குஸமாககுணமுள்ள ஆகாரமும் செய்கையும் ஸ்ரோதஸ்ஸுக்களை கெடுக்கின்றன. அவ்விதமே ரஸரக்தாதிகளான் தாதுக்களுக்கு விருத்தகுணமுள்ள ஆகாரமும் செய்கையும் ஸ்ரோதஸ்ஸுக்களைக் கெடுக்கின்றன. ஆகவே இந்நோயில் வாயுவுக்கு சமானகுணமுள்ள ஆகாரமும் செய்கையும் காரணமாகின்றது. அவ்விதமே ரக்த குணங்களுக்கு விருத்தமான ஆகார விஹாரங்களும் காரணமாகின்றன. பிரகோபத்தை யடைந்த வாயு ரக்தத்தை ஆச்ரயித்தால் அது ஓர் தனிநோயாகவாத ரோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது; அதற்கும் இந்நோய்க்குமுள்ள பேதத்தை அறிவது அவசியம். முன்சொன்ன ஓர் வகை வாதநோயில் ரக்தம்மாத்திரம் தூஷ்யமாகும். இந்நோயிலோ வெனில் ரக்தக்குழாய்களும் தூஷ்யமாக ஆகின்றன. இவ்விரண்டு நோய்களிலும் சிகித்சையும் வேறுபடுகின்றது. ரக்தக்குழாய்களில் ஏற்படும் தடையை "ஸிராணும் கிரந்தயோபிவா" என வாக்படர் கூறியுள்ளார்.

இனி இந்நோயில் செய்யப்படும் சிகித்சையை கவனிப்போம். வாதஹரமாயும் ஸ்ரோதஸ்ஸுக்களுக்கு மிருதுத்தன்மையை யளிக்கக்கூடியதாயும் ஸ்ரோதஸ்ஸுக்களில் பற்றியுள்ள அம்சங்கள் நிவர்த்தியாகக்கூடியதாயுமுள்ள மருந்துகள் இந்நோயில் குணமளிக்கக்கூடியவை. ஸுகுமாரகிருதம், யோக ராஜகுக்கலு, முதலிய மருந்துகள் இவைகளில் மிகச்சிறந்தவை. சுபம்

## பண்டிட் மாளவியா அவர்களும் காயகல்பமும்

(பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

ஆதிகாலத்தில் மகர்ஷிகள் நோயற்ற வாழ்வை விரும்பியும் தபஸ்ஸுக்கு உசிதமான திருட சரீரத்தைப் பெறக்கருதியும் ரஸாயநம் என்ற காயகல்பத்தை அறிந்து அநுஷ்டித்துப்பலனும் பெற்றதாக சரித்திரங்கள் கூறுகின்றன. ரஸாயநமுறை தத்காலம் நம்மால் கைவிடப்பட்டிருந்தபோதிலும் நூல்களில் பலமுறைகள் காணப்படுகின்றன. அவைகள் நாளைக்கும் பலரும் அநுஷ்டிக்கும்படி தெளிவான நடைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. சுசுருத சரகங்களில் சொல்லப்பட்ட ரஸாயந முறைகளில் சில முறைகள் தத்காலம் அநுஷ்டிக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன. ஆனால் அஷ்டாங்கஹிருதயத்தில் சொல்லப்பட்ட ரஸாயன முறைகள் அனைத்தும் இன்றைக்கும் பலரும் அநுஷ்டிக்கக்கூடிய நிலைமையில் எழுதப்பட்டிருக்கின்றன. அஷ்டாங்க ஹிருதயத்தில் வாக்படர் கூறுவதாவது:—

**उक्तानि शक्यानि फलान्वितानि युगानुरूपाणि रसायनानि ।**
**महानुशंसान्यपि चापराणि प्राप्त्यादि कष्टानि न कीर्तितानि ॥**

இதன் பொருள்—“சரக சுசுருதங்களில் அத்புதமான பல ரஸாயன முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளை நான் இப்புத்தகத்தில் சொல்லவில்லை. ஏன்? அச்சரக்குகள் தத்காலம் நமக்குக் கிடைப்பதில்லை. அவைகளை உபயோகிப்பதும் கஷ்டம். ஆகவே அம்மாதிரியான ரஸாயனங்களை விலக்கிவிட்டோம். எவை சுலபமோ நல்ல பலனளிப்பவையோ இக்காலத்திற்கு ஏற்றவையோ அவைகளை மாத்திரம் பொருக்கி எடுத்து இந்நூலில் கூறியுள்ளோம்” இவ்வசனத்தால் அஷ்டாங்க ஹிருதயத்திலுள்ள ரஸாயன முறைகள் அனைத்துமே சுலபமானவை என்று ஏற்படுகிறது. அனுபவத்திலும் நாம் அவ்விதமே காணுகின்றோம். முறைகளனைத்தும் சுலபமாகச் செய்து உபயோகிக்கக் கூடியவைகளாக அமைந்திருக்கின்றன. ரஸாயன முறைகளை அனுபவித்தவர்கள் நம் நாட்டில் துர்லபமாக விருப்பதால் அம்முறைகளின் சீர்மையைக் கண் கூடாகத்தெரிந்து

கொள்ள நமக்குச் சந்தர்ப்பமின்றியிருக்கின்றது. பண்டிட் மாளவியா அவர்கள் உபயோகித்த ரஸாயன முறையும் அவர்கள் அனுபவமும் நமக்குச் சற்று வழிகாட்டியாயிருப்பது பற்றி அதை இங்கு விவரிப்போம். அஷ்டாங்க ஹிருதயத்தில் ரஸாயநாத்யாயத்தில் 28வது சுலோகம் முதலாக 32 சுலோகம் முடிய அடியிற் காணுமாறு ஓர் ரஸாயன முறை சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது—

निरुजार्द्रपलाशस्य छिन्ने शिरसि तत्क्षतम्
अन्तर्द्विहस्त गम्भीरं पूर्यमामलकैः नवैः ।
आमूलं वेष्टितं दर्भैः पद्मिनी पङ्कलेपितम्
आदीप्य गोमयैः वन्यैः निर्वाते स्वेदयेत् ततः ॥
स्विन्नानि तान्यामलकानि तृप्त्या खादेन्नरः क्षौद्रघृतान्वितानि ।
क्षीरं घृतं चानु पिबेत् प्रकामं तेनैव वर्तेत च मासमेकम् ॥
वर्ज्यानि वर्ज्यानि च तत्र यत्नात् स्पृश्यं च शीतांबु न पाणिनापि ।

இதன் பொருள்—பலாசமரம் என்ற புரசமரத்தைக் காட்டில் தேடி எடுக்கவேண்டும். அது பச்சை மரமாக இருக்கவேண்டும். அம்மரத்தில் குற்றம் ஒன்றும் இருக்கக்கூடாது. நன்ருக முதிர்ந்த மரமாக இருக்கவேண்டும். அந்த மரத்தை அடிமரம் மாத்திரம் நிற்கும்படி வைத்துக்கொண்டு மேல்பாகத்தை வெட்டிவிடவேண்டும். சுமார் பூமியிலிருந்து மூன்று அல்லது நான்கு அடி உயரம் வைத்துக்கொண்டு கிளை பிரியும் பாகத்திலிருந்து வெட்டிவிடவேண்டும். வெட்டின பிறகு மரத்தின் உச்சியிலிருந்து சுமார் இரண்டு முழம் ஆழத்திற்கு அம்மரத்தில் நடுவில் துளை போடவேண்டும். அதாவது நமது நாட்டில் பலாசமரம் சுமார் மூன்றடி சுற்றளவுள்ளதாகக் கிடைப்பது சுலபம். அம்மரத்தில் நடுவில் குடைந்து இரண்டு முழம் ஆழம் பள்ளம் செய்யவேண்டும். மரத்தைச்சுற்றிவர நான்கு பக்கத்திலும் சுமார் ஆறு அங்குலம் கனமுள்ள பாகத்தை நிறுத்திவிட்டு மீதி பாகத்தைக் குடைந்து எடுக்கவேண்டும். அந்தப் பள்ளம் நிறைய நல்ல நெல்லிக்கனிகளைப் போடவேண்டும். மேல் வாய்க்கு அதே புலாச மரத்தின் பச்சைப் பலகையைப் போட்டு மூடி விடவேண்டும். பிறகு மரத்தின்

அடியிலிருந்து நுனி வரை பச்சை தர்ப்பத்தால் சுற்றவேண்டும். அதற்குமேல் தாமரை யோடையிலுள்ள சேறு அல்லது களி மண்ணுல் நான்கு விரல் பிரமாணம் பூசவேண்டும். காற்று வீசாமல் அம்மரத்தின் நான்கு பக்கங்களிலும் தட்டி முதலியவை களால் மறைத்து விடவேண்டும். பசும்சாண எருவாட்டிகளை அம் மரத்தையொட்டிச்சுற்றி நான்கு பக்கங்களிலும் நுனி வரை யடுக்கித் தீயிடவேண்டும். புகையில்லாமல் நன்ருக ஜ்வாலை விட்டு எறியும் படி செய்யவேண்டும். அதாவது இத்தீயால் பச்சை மரத்தில் ஓர் புழுக்கம் உண்டாகி அதில் உள்ளிருக்கும் நெல்லிக்கனிகள் வேக வேண்டும். இதுதான் பதம். பிறகு மூட்டத்தை விலக்கி விட்டு உள்ளிருக்கும் நெல்லிக்கனிகளை உள்ளிருக்கும் விதை நீக்கி வயிறு நிறைய சாப்பிடவேண்டும். தேன், நெய் இவைகளையும் சேர்த்துக் கொண்டு ஷ்டி கனிகளைச் சாப்பிடவேண்டும். வயிறு நிறைய தேவையான வளவு சாப்பிட்ட பிறகு காய்ச்சின பசும்பாலை வேண்டிய வளவு அனுபானமாகச் சாப்பிடவும். பசி எடுக்கும் பொழுதும் பசும்பாலையே ஆகாரமாகக் கொள்ளவேண்டும். வேறு ஒன்றும் சாப்பிடக்கூடாது. இவ்விதம் ஒரு மாதம் செய்யவேண்டும். அபத் யங்களை இக்காலத்தில் பூர்ணமாக விலக்கவேண்டும். பச்சை நீரை கையால் கூட தொடக்கூடாது." குறிப்பு:—இம்முறையைச் செய் வதில் அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். (1) மரத்தில் பூச்சி புழு வெட்டு இல்லா மல் நல்ல கெட்டியான மரமாகவும் முதிர்ந்ததாகவும் இருக்க வேண்டும். (2) மரம் இருக்கும் இடத்தில் வேர்களுக்குப் பாதக மில்லாமல் அப்படியே வைத்துக்கொண்டு மேல்பாகத்தை வெட்டி விடவேண்டும். (3) மரத்தின் நடுவில் குடையும்பொழுது மரம் பிளந்து போகாமல் கவனித்துக்கொள்ள வேண்டும். (4) நெல்லிக் கனி நன்ருகப் பழுத்ததாக இருக்கவேண்டும். (5) நெல்லிக்கனி யில் அடிபடாமலும் காயம் படாமலும் உள்ளவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். (6) அவை நன்ருக வேகவேண்டும். அதாவது புரசம் ரஸம் பெருகி அதோடு சேர்ந்து பக்வமாக வேண்டும். புரசம் மரத்தில் ஓர் உப்பு இருப்பதால் அந்த உப்பில் நெல்லிக்கனி பக்வமாவதால் ஓர் அபூர்வ சக்தியைப்பெறுகின்றது.

(7) ரஸாயனம் உபயோகிப்பவர்கள் ஏற்கனவே வமன விரேசனங்கள் செய்து சுத்தமாகச் சரீரத்தை வைத்துக் கொள்ளவேண்டும். (8) நெல்லிக்கனிகளை வயிறு நிறைய சாப்பிடவேண்டும். தேனையும் நெய்யையும் நடுவில் கலந்து கொள்ளவேண்டும். இவ் விதம் ஒரு நாள் மாத்திரம் நெல்லிக்கனியைச் சாப்பிட்டுப் பிறகு 30 நாள் பால் மாத்திரம் ஆகாரமாகக் கொள்ள வேண்டும். (9) குடீப் பிரவேசம் என்ற கிரமத்தை அனுஷ்டிக்கவேண்டும். அந்தக்கிரமம் மிக விரிவானதால்பிறகு ஒரு சமயம் விவரிப்போம். இந்த 9 அம்சங் களையும் பூர்ணமாக அனுஷ்டித்தால் நூலில் கூறப்பட்ட பூர்ண பலனும் கிடைக்கும். இவைகளில் சில அம்சங்கள் விட்டுப்போனல் பூர்ணமான பலன் கிடைக்காது. இம்முறையை மாளவியா அவர் களும் அவர் நண்பரும் அனுஷ்டித்த பொழுது பூர்ண அம்சங்களும் இருக்கவில்லை யென்பது பத்திரிகைகளுக்கு எழுதியுள்ள வியாசத் தில் காணப்படுகின்றது. ஆகவே அவருக்கு ஓரளவு பலன்தான் கிடைத்தது. அவருடைய நண்பருக்கு சற்று அதிக பலன் கிடைத் ததாக அறிகிறோம். முதலில் ரஸாயனம் சேவிப்பவர் வயதின் முற் பகுதி அல்லது நடுப்பகுதியில் இருக்கவேண்டும். பிற்பகுதியில் இருப்பவருக்கு ரஸாயனம் சேவிக்க அதிகாரம் கிடையாது. மாளவியா அவர்கள் பிற்பகுதி வயதில் ரஸாயனம் சேவித்ததே உசிதமல்ல. அவர் தான் உபயோகித்த விதத்தை விவரிக்கும் பொழுது கூறுவதாவது—

"சிலர் அவ்வப்பொழுது காயகல்பம் அனுஷ்டித்திருக்கின்றனர். குடீபிரவேசம் என்ற ரஸாயன முறைகளை அனேகமாகச்சாதுக்களும் சன்னியாசிகளும் சில கிருஹஸ்தர்களும் அனுஷ்டித்திருக்கின்றனர். வடமதுரை (மட்ரா) ஜில்லாவைச் சேர்ந்த காட்பன் என்ற ஊரில் தபஸி பாவா என்றவிஷ்ணுதாஸ் என்ற உதாஸி சாதுவானவர் இரண் டரை வருஷங்களுக்கு முந்திகுடீப்பிரவேசம் என்ற ரீதியில் ரஸாயன முறையை அனுஷ்டித்தார். எடா ஜில்லாவில் ஸாகீத் என்ற ஊரில் ராய் இந்திர நாராயணன் என்பவரின்மேல் பார்வையில் இக்காயகல்பம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச்சாது இதற்கு முந்தி பல தடவைகளில் இம்மாதிரி காயகல்பம் அனுஷ்டித்துப் பழகின வர். ராய் இந்திர நாராயணன் என்பவரின் மேல் பார்வையில் நடந்த

காயகல்பம் விசேஷ பலனை யளித்தது. தபஸி பாவா அவர்கள் கல்பமுறையை அனுஷ்டிப்பதற்கு முந்தி 65 வயதிலிருந்து 70 வயது வரையில் அவர்களுக்கு இருக்குமென்பது பல ஜனங்கள் அறிந்த விஷயம். சிலர் அவர்களுக்கு இதை விட அதிக வயதிருக்குமென்று நினைத்தார்கள். அவர்கள் குடிப்பிரவேசரீதியில் காய கல்பத்தை அனுஷ்டித்து 40 நாள் கழித்து வெளி வரும்பொழுது 40 வயதிற்கு அதிக வயதில்லாதவராகக் காணப்பட்டார். இந்த அத்புதத்தை நேரில் கண்ட இரு கனவான்கள் (மட்ராஸைச்சேர்ந்தவர்கள்) 1937வரு மேமாதத்தில் இந்தக் காயகல்ப விஷயமாக என்னைக் கண்டு பேசி இக்கல்ப முறையை அனுஷ்டிக்கும்படி என்னை வற்புறுத்தினார்கள். தபஸி பாவாவை அழைத்து வரும்படியும் அவருடன் நேரில் பேசாமல் இவ்விஷயத்தில் தீர்மானம் செய்ய முடியாதென்றும் அவர்களிடம் சொன்னேன். சில நாள் கழித்து காஸியாபாத் என்ற ஊரைச்சேர்ந்த ஆனந்தஸ்வாமி என்பவர் பண்டிட் ஹரதத்த சாஸ்திரிகளுடன் என்னைப் பார்க்க வந்தார். இவ்விருவர்களும் காயகல்பம் அனுஷ்டிக்கும்படி என்னை வற்புறுத்தினார். எடா ஜில்லாவில் காயகல்பத்தை அனுஷ்டித்த அந்த சாதுவை நேரில் நான் பாராமல் இவ்விஷயத்தில் தீர்மானம் செய்யமுடியாதென்று சொல்லிவிட்டேன். சில நாள் கழித்து ஆனந்தஸ்வாமி அவர்கள் அந்த சாதுவை அழைத்து வந்தார். தபஸி பாவா அவர்கள் 35 வயது முதல் 40 வயது வரை உள்ளவராகக் காணப்பட்டார். அவரைப் பார்த்ததாலும் அவருடன் பேசியதாலும் மற்றுஞ்சிலருடன் செய்த சம்பாஷணைகளாலும் காயகல்பமென்பது ஓர் அத்புத முறையென்றும் நான் அதை அனுஷ்டிப்பதென்றும் முடிவு செய்தேன். என்னுடைய நெருங்கின சுற்றத்தாரும் சிநேகிதர்களும் என் தள்ளாத வயதில் இக்கடுமையான பரீக்ஷைக்கு நான் ஆளாவதைப் பலமாக ஆக்ஷேபித்தனர். அவர்களை நான் மிகுந்த சிரமத்துடன் சமாதானம் செய்யவேண்டியிருந்தது. கடைசியாக இம்முறையை அனுஷ்டிப்பதென்ற முடிவுக்கு வந்தேன். பாவாஜி அவர்கள் பண்டிட் ஹரதத்த சாஸ்திரிகளையும் என்னுடன் காயகல்பம் அனுஷ்டிக்கும்படி சொன்னதின் பேரில் சாஸ்திரிகளும் அதற்கு இசைந்தார். குடிப் பிரவேசத்திற்கு லாயக்காக ஓர் புதிய குடிசையைச் சாஸ்திர ரீதி

யாக நிர்மாணிக்கப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. என்னுடைய நண்பர் காலம் சென்ற லாலா ராமசரணதாஸ் அவர்களின் பேரனை லாலா மனமோஹனதாஸ் (அலகாபத்தைச் சேர்ந்தவர்) அவர்கள் சிவகோடி என்ற ஸ்தலத்திலுள்ள ராம்பா என்ற பங்களாவைப் பூர்ணமாக எங்கள் ஸ்வாதீனத்தில் விட்டார்கள். அதிலுள்ள இரண்டு முக்கியமான கட்டடங்களில் இரண்டுவராண்டா (தாழ்வாரங்கள்)க்களை ஒன்றாய் சேர்த்து சாஸ்த்திரத்தில் சொல்லியபடி ஏறக்குறைய சாத்தியமான வளவு ஓர் குடீ ரீதியை ஏற்படுத்தினோம். 1938ஜு ஜனவரிமீ 16உ காயகல்ப முறை ஆரம்பிக்கப்பட்டது. அதே வருஷம் பிப்ரவரிமீ 24உ பூர்த்தியாயிற்று. நானும் சாஸ்திரிகளும் எங்களுக்கென அமைக்கப்பட்ட இடங்களில் வசித்தோம். எங்களிருவருக்கும் நடுவில் 50 அடி தூரம் இருந்தது. இவ்விதம் 40 நாள் வசித்தோம். இவ்விதம் வசித்தது மிகவும் கடினமாகவே இருந்தது. இந்த 40 நாளும் நாங்கள் சூரியனைக்கூட பார்க்கவில்லை. எங்கள் பேரில் காற்றுகூட படவில்லை. நாங்கள் அந்த வீட்டின் தாழ்வாரத்திற்குக் கூட வரும்படி அனுமதிக்கப்படவில்லை. பொழுது போக்கிற்காக நாங்கள் அபூர்வமாகப் படிக்கலாம். அதிகமாகப் படித்து சிரமப்படக் கூடாதென நாங்கள் உபதேசிக்கப்பட்டோம். ஆனால் வராண்டாவில் ஒரு மூலையில் என் அறைக்குப் பக்கத்தில் உச்சிகாலத்திற்குள் சில ஸமய காலம் ஓர் பண்டிதர் வேதமந்திரங்களை ஓதி ருத்ராபிஷேகம் செய்து வந்தார். என் அறையைச் சேர்ந்த மற்றொரு பக்கத்தில் மற்றொரு பண்டிதர் பாகவதம் பாராயணம் செய்தார். எங்கள் அறைகளுக்குள் அபூர்வமாகக் காண வந்தவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டோம். அனேகமாக இந்த நாற்பது நாட்களையும் தனிமையாய் கழித்தோம். ஸ்நாநம் வியாயாமம் (exercise) உடம்பைப்பிடித்தல் இவைகள் அறவே விடப்பட்டன. க்ஷவரம் செய்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இந்த நாற்பது நாளும் சுடு நீரையே உபயோகித்தோம். இரவும்பகலும் இருட்டிலேயே வசித்தோம். அபூர்வமாக மெழுகுவர்த்தி தீபத்தையும் எலக்டிரிக்விளக்கையும் உபயோகித்தோம் பசும்பால் தான் எங்களுக்கு ஆகாரம். எங்களால் இயன்ற வளவு பசும்பாலைச் சாப்பிட்டோம். 1½ முதல் 2 சேர் வரை நான் பிரதிதினம் பாலை

உபயோகித்தேன். (சேர் என்பது 80 தோலா இடையுள்ளது.)

வாக்படர் எழுதியுள்ள அஷ்டாங்க ஹிருதயத்திலுள்ள ஓர் ரஸாயன மருந்து எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. அம்மருந்தில் நெல்லிக்கனி முக்கிய சரக்கு. அக்கனிகளுடன் நான்கு மூலிகைச் சூர்ணங்கள் சேர்க்கப்பட்டன. இந்நான்கு சரக்குகள் அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்படா விட்டாலும் இவைகளின் சேர்க்கை யால் விசேஷ குணம் கிடைக்குமென்று பாவாஜி அவர்கள் நினைத்தார்கள். இந்நான்கு சரக்குகளின் ரகசியத்தை தன் சிஷ்ய ராகிய கிருஷ்ணதாஸ் என்பவருக்கு மாத்திரம் பாவாஜி அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எங்கள் சிகித்ஸை முடிந்த பிறகு இந் நான்கு சரக்குகளின் பெயர்களை எனக்கும் சொன்னார்கள். அச் சரக்குகளை உசிதமான காலத்தில் வெளிப்படுத்த எனக்கு அதிகாரமும் கொடுத்திருக்கிறார்கள். அம்மூலிகைகளை இயற்கை உருவத்துடன் எனக்குக் காண்பிப்பதாகச் சொல்லியுள்ளார்கள். அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லியுள்ள படி பலாசமரம் நிறைந் துள்ள ஓர் காட்டில் மருந்து தயாரிக்கப்பட்டது. அக்காடு நான் இருக்குமிடத்திற்கு முப்பது மைல் தூரத்திலிருந்தது ஒவ்வொரு நாளும்காலை எட்டு மணிக்கு முன்பே ரெயில் மூலமாக அம்மருந்து கொண்டு வரப்பட்டது. ஒரு வேளை மருந்து ஏறக்குறைய ஆறு அவுன்சு இடையுள்ளதாக இருந்தது. நெல்லிக்கனி இரண்டு அவுன்சும் நெய் இரண்டு அவுன்சும் தேன் ஏறக்குறைய இரண்டு அவுன்சும் உள்ளதாக இருந்தது. காலையிலும் சாயங்காலத்திலும் ஒவ்வொரு நாளும் நாங்கள் இவ்விதம் இம்மருந்தை இந்த அளவில் உபயோகித்து வந்தோம். நாங்கள் மருந்து சாப்பிடும்பொழுது பாவாஜி அவர்கள் கூடவிருந்து மருந்தைச் சாப்பிடும்படி எங்களைத் தூண்டுவார். ஒவ்வொரு நாளும் இந்த அளவில் இம்மருந்தை சாப்பிடுவது எங்களுக்குக் கஷ்டமாக விருந்தது. என் நண்பர் பண்டிட் ஹரதத்த சாஸ்திரிகள் அந்த நாற்பது நாளும் அளவுப்படி சரியாக அம்மருந்தை உபயோகித்து வந்தார். சில நாட்களுக்குப் பிறகு என் மருந்தின் அளவைச் சரிபாதியாகக் குறைக்கும்படி பாவாஜி அவர்களை நான் பிரார்த்தித்தேன்.

முதல் மூன்று வாரங்களை என் குடிசையில் நான் சுகமாகக் கழித்தேன். சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீயந்திரம் பூஜை செய்வது வழக்கமாதலால் பல தியான சுலோகங்களை அவர்கள் வாய்ப்பாடம் செய்திருந்தார்கள். அந்த சுலோகங்கள் அவருக்கு ஏற்றதுணையாக விருந்தன. இந்த நாட்களில் இரவும் பகலும் ஏராளமாகத் தூக்கம் எனக்கு வந்தது. மூன்று வாரங்களுக்குப் பிறகு எனக்கு இயற்கை யான தூக்கத்தை விட குறைவாகவே இரவில் தூக்கம் இருந்தது. அக்குறைவை பகலில் ஈடு செய்தேன். சுவல்ப நாட்களுக்குப்பிறகு இரவில் கிரமமாக தூக்கம் குறைந்துகொண்டு வந்தது. கடைசியாக சில நாட்கள் இரவில் தூக்கமே இல்லாமல் போய்விட்டது. பகலில் கொஞ்சமாக வரும் தூக்கத்துடன் திருப்தி யடைய வேண்டிய தாயிற்று. சாஸ்திரிகளும் பத்து நாட்கள் தூக்கமே இல்லாமலிருந் தார். இந்தப் பத்து நாட்களில் ஒரு நாளில் தனக்கு ஆபத்துகூட வருமென்று நினைத்து அஞ்சினார். ஆனால் அவ்விதமின்றி விலகி விட்டது. கியாநாகந்தர் என்ற ஓர் இளம் பிராயமுள்ள வைத்தியர் பக்தியுடன் பண்டிதருக்கு சிச்ருஷை செய்து வந்தார். முகுந்தர் என்ற என்னுடைய புத்ரன் எனக்கு சிச்ருஷை செய்து வந்தார். தூக்கமின்மை என்னை வருத்தியது. அது எனக்கு பலக்குறைவை செய்துவிட்டது. மருந்து பூர்த்தியான பிறகு கூட பத்து நாள் வரை தூக்கமின்மை என்னைக்கஷ்டப்படுத்தி விட்டது. மருந்து பூர்த்தியான பிறகு குடிசையைவிட்டு வெளிவர ஸ்வாதந்திரியம் பெற் றேன். பால் ஆகாரம் மாத்திரம் போதாதென்றும் கெட்டி ஆகாரம் சாப்பிடவேண்டுமென்றும் அவ்விதம் கெட்டி ஆகாரம் சாப்பிட்டால் என் அசக்தி நீக்கி தூக்கம் வருமென்றும் எனக்குச்சொன்னார்கள். ஆனால் எனக்கு கெட்டி ஆகாரத்தில் அப்ரீதி அதிகரித்துவிட்டது. பாட்னா நகரில் பிரசித்த வைத்யரான என்னிடம் மிக விசுவாசமுள்ள பண்டிட் விரஜவிஹாரி கௌபி என்பவரிடம் என் தூக்கமின்மையைப் பற்றி என்னுடைய புத்திரர்கள் தெரியப்படுத்தினார்கள். அவர் பாட்னாவிலிருந்து என் இருப்பிடம் வந்து என்னோடு மூன்று நாள் தங்கி என் தூக்கமின்மையை விலக்கச் சிரமமெடுத்துக் கொண்டார் கள். பாவாஜி அவர்கள் சொன்னதுபோலவே கெட்டி ஆகாரம் எடுத்துக்கொள்ளும்படி என்னை பாட்னா வைத்யர் அவர்களும்

நிர்ப்பந்தப்படுத்தினார்கள். பண்டிட் ஹாரதத்த சாஸ்திரிகளின் சிஷ்யரான கவி ராஜ் கேதாரநாத் என்பவர் (கல்கத்தாவில் வசிப்பவர்) சாஸ்திரிகளைப் பார்க்க வந்தார். தூக்கமில்லாததன்மையை நிவர்த்திப் பதில் அவருடைய ஒத்தாசையும் எனக்குக் கிடைத்தது. என்னைக் காணவந்த என் நண்பர்களான ஆங்கில வைத்யர்களும் கெட்டி ஆகாரம் நிறைய சாப்பிடும்படி என்னை வற்புறுத்தினார்கள். பாவாஜி அவர்கள் மறுபடியும் வந்து முன் சொன்னதுபோல கெட்டி ஆகாரம் சாப்பிடும்படி சொன்னார்கள். அவர்கள் பேச்சை அனுஷ்டிக்க ஆரம்பித்தவுடன் நல்ல தூக்கமும் வர ஆரம்பித்தது.

நாங்கள் உபயோகித்த மருந்தின் குணம்—நானும் என் நண்பரான பண்டிட் ஹாரதத்த சாஸ்திரிகளும் இம்முறையை அனுஷ்டித்ததால் வியக்தமாக அனுகூலமடைந்தோம். சாஸ்திரிகள் அவர்கள் வயதில் என்னை விட 14 வருஷம் இளையவர். ஆகவே அவர் மிகுந்த ஆரோக்யம் பெற்றார். சிகித்சைக்கு முந்தியும் பிந்தியும் எடுத்த அவருடைய போட்டோக்களை ஒத்திட்டுப்பார்த்தால் அது நன்கு விளங்கும். அதுபோலவே சிகித்சைக்கு முந்தியும் பிந்தியும் எடுத்த என்னுடைய போட்டோக்களை ஒத்திட்டுப் பார்த்தால் என் தேகாரோக்யத்தில் ஏற்பட்டுள்ள மாறுபாடு வியக்தமாக விளங்கும். தேக எடையில் ஒன்பது பவுண்டு நான் அதிகரித்தேன். என் சரீரத்தின் நிறமும் காந்தியும் அபிவிருத்தியடைந்தது. கண்பார்வை சீர்பட்டது. என் துவனியும் ஓரளவு பழைய நிலைமைக்கு (இளம் வயதிலிருந்த நிலைமைக்கு) வந்தது. என் ஞாபக சக்தியும் ஓரளவு பழைய பலம் பெற்றது. என் தலைமயிர் நன்றாக கருப்பு நிறம் அடைந்தது. என் கை நடுக்கம் மிகவும் குறைந்துவிட்டது. நான் நிமிர்ந்து நடக்கின்றேன். இனிபிரயோஜனமில்லை என்று என்னைப்பற்றி நான் நினைத்திருந்தஎண்ணம் மாறி அதன் ஸ்தானத்தில் என்னைப்பற்றிய ஓர் நம்பிக்கை உதிக்கலாயிற்று. போதுமானதா யில்லாமலும் ஒழுங்கற்றதுமான தூக்கம் சம்பந்தமான ஹிம்சை மாத்திரம் எனக்கு நேராமலிருந்தால் இச்சிகித்சையால் உண்டான ஆரோக்யம் மிகவும் அதிகமாகவே இருந்திருக்கும். சிகித்சை ஆரம்பிப்பதற்கு முந்தி நான் மிகவும் இளைத்துத்தளர்ந்து

துர்பலமாக இருந்த நிலைமையையும் சிகித்சை முடிந்த பிறகு இப்பொழுது நான் இருக்கும் நிலைமையையும் ஒத்திட்டுப்பார்த்தால் இம்மாறுதலுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். நான் சாஸ்திரோக்தமாக பஞ்சகர்மாக்களை ஒழுங்காகச் செய்து சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டு இச்சிகித்சையை ஆரம்பித்திருந்தால் எனக்கு இன்னும் அதிக பலன் கிடைத்திருக்கும். இச்சிகித்சையின் பூர்ண பலனை அடைய வேண்டுமானால் பஞ்ச கர்மாக்களை ஒழுங்காகச் செய்து சற்று ஓய்வெடுத்துக் கொண்டு சரீரத்தில் பலன் வந்த பிறகு இச்சிகித்சையை ஆரம்பிக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். இச்சிகித்சையைப் பெற விரும்புகின்றவன் தன்னுடைய மனக்கவலையை அறவே ஒழித்துவிட வேண்டும். ஓர் குறிப்பிட்ட மனிதன் எந்த வயதில் காயகல்பத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்பதை ஓர் நிபுணனான வைத்யன் நிர்ணயிக்கவேண்டும், அல்லது இம்முறையில் அனுபவம் பெற்ற ஓர் சாது தீர்மானிக்க வேண்டும். இம்முறையானது வயதின் முற்பகுதி அல்லது நடுப்பகுதியில் அதாவது 40 வயதிலிருந்து 70 வயதிற்குள் அனுஷ்டிக்கப்படலாமென வாக்படர் கூறியுள்ளார். ஆனால் மனிதனின் ஆரோக்யத்தையும் பலத்தையும் பொறுத்தே இதை நிர்ணயிக்கவேண்டும். ரஸாயன முறைகளை அனுஷ்டித்தால் பழைய பற்கள் விழுந்து புதிய பற்கள் முளைக்குமென்றும் பழைய நகங்கள் விழுந்து புதிய நகங்கள் முளைக்குமென்றும் வாக்படர் நூலில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் சிகித்சை ஆரம்பிப்பதற்கு முந்தியே பாவாஜி அவர்கள் தான் செய்யப்போகும் சிகித்சையால் பற்களும் நகங்களும் விழுந்து மறுபடியும் புதிதாக முளைக்காதென உறுதியாகச் சொல்லிவிட்டார். தலைமயிர் கறுத்துவிடுமென்றும் என் வயதில் இருபது வயது குறைந்தவனாகப் பார்வைக்குத் தோற்றுவேனென்றும் சொன்னார். உண்மையில் அவர்கள் சொன்னது போலவே என் தலைமயிர் கறுத்துவிட்டது. புஸ்தகங்களை நான் படித்த மட்டிலும் ரஸாயன முறைகளை அனுஷ்டித்தவர்களை நான் பார்த்த மட்டிலும் எனக்குத் தோன்றுவதென்னவெனில் சரகம் வாக்படம் முதலிய வைத்ய நூல்களில் சொல்லப்பட்ட ரஸாய்ன மருந்துகள் அனைவற்றும் அவைகளில் சொல்லியுள்ள குணங்களை

யளிக்க வல்லவையே. ஆனால் பற்களும் நகங்களும் விழுந்து புதிதாக முளைக்குமென்று அவைகளில் சொல்லியுள்ளதும்; ஆயிரக் கணக்கான வருஷங்கள் வரை ஆயுள் நீடிக்குமென்று சொல்லியிருப்பதும் பொருத்தமற்றவை.

ரஸாயன சிகித்சை அதிலும் விசேஷித்து குடீப்பிரவேசம் என்ற ரீதியில் செய்யப்படும் ரஸாயன சிகித்சை அனுஷ்டிப்பது சிரம சாத்தியம். அவசியமான ஜாக்கிரதையும் தகுந்த நிபுணரும் இல்லாவிட்டால் இம்முறை தீங்கை விளைவிக்கும். இச்சிகித்சையை அனுஷ்டித்த சாதுக்கள் இருக்கின்றனர். இச்சிகித்சையில் புத்திமதி கூறும் நிபுணர்களும் இருக்கின்றனர். இவ்விருவர்களையும் சேர்த்துக்கொண்டு காயகல்பத்தில் அவர்களுக்கிருக்கும் அறிவின் பலனைப் பொது ஜனங்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். குடீப்பிரவேசம், வாதாதபிகம் என்ற எந்த வகை ரஸாயன சிகித்சையை அநுஷ்டித்தபோதிலும் ஓர் தகுந்த ஆயுர்வேதவைத்தியனுடைய ஆலோசனையையும் சம்ரக்ஷணையையும் பெறவேண்டியது அவசியம். சரகாசாரியர் கூறியிருப்பதுபோல ஒவ்வொரு வைத்தியனும் ரஸாயன முறையைச்செய்து வைக்கமுடியாது. ஒவ்வொரு மனிதனும் ரஸாயனத்தை அனுஷ்டிக்க முடியாது. மகர்ஷிகளுக்கும் சமூகசேவையில் ஈடுபட்டவர்களுக்கும் அத்யாத்மநோக்கம் கொண்டவர்களுக்கும் தான் இம்முறைகள் உத்தேசிக்கப்பட்டன வென்று சரகத்திலும் மற்ற நூல்களிலும் பன்முறை வற்புறுத்தப் பட்டுள்ளது. சரகர் வைத்தியர்களுக்கு உபதேசிப்பது போல ஜீவ காருண்ய நோக்கத்துடன் இம்முறைகளைப் பரிசீலிக்கவேண்டும். இச்சிகித்சையை திரவிய சம்பாதனத்திற்கு ஓர் உபாயமாகக் கருதக் கூடாது.

இத்துறையில் ஆராய்ச்சி மிகவும் அவசியம். காயகல்பம் அனுஷ்டித்தால் ஆரோக்யமான வாலிபதசை உண்டாகுமென்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. நமது வைத்தியர்கள் இருவகையான காயகல்பங்களையும் அவ்வப்பொழுது செய்து வைத்து பலர் நன்மையடைந்திருக்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன் சரகர் முதலியோர் இவைகளை எழுதி வைத்திருக்கின்றனர். சமீபகாலமாக

சில புதிய முறைகள் தலை தூக்கியிருக்கின்றன. அமெரிக்காவில் பாலின் குணுதிசயங்கள் விஸ்தாரமாக அறியப்பட்டிருக்கின்றன. டாக்டர் கெலாக் (Dr. Kellog) என்பவர் தன் புஸ்தகத்தில் பாலைப் பற்றிப் பூர்ணமாக வர்ணித்திருக்கின்றார். பழைய முறைகளும் புதிய முறைகளும் கவனமாகப் படித்து அனுஷ்டித்தால் அறியாமல் அனுஷ்டிப்பதால் உண்டாகும் ஆபத்துக்களை விலக்கலாம். இம் முறையை யொட்டிய பல விஷயங்களில் ஆராய்ச்சி அவசியமாக இருக்கலாம். வைத்ய நிபுணர்களும் அனுபவமுள்ள சாதுக்களும் ஒன்று சேர்ந்து சபைகூட்டி இச்சிகித்சையை யொட்டிய விஷயங்களை சர்ச்சை செய்வது அவசியம். அடுத்த சரத்காலத்தில் இப்பேர்ப்பட்ட சபையை காசியில் ஹிந்து யூனிவர்சிடியில் கூட்ட நான் உத்தேசித் திருக்கின்றேன். ஹிந்து யூனிவர்சிடியில் ரஸாயன மருந்துகளை ஆராய்ச்சி செய்ய ஓர் புதிய வகுப்பை ஆரம்பிக்கவும் உத்தேசித் திருக்கின்றேன். முன் சொன்ன என் எண்ணங்களைக் கைகூடும் படி செய்ய ஆயுர்வேத வைத்யர்கள் அனைவரும் ஒத்துழைப்பார் களென நம்புகின்றேன்."

இவ்விதம் பண்டிட் மாளவியா அவர்கள் விஸ்தாரமாக தன் அனுபவத்தை 1938ஸு மேமீ 1உயில் பத்திரிகை வாயிலாக வெளி யிட்டுள்ளார்கள். ரஸாயனங்களைப் பற்றிப் பொதுவில் இவர் கொண்டுள்ள ஊகம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ஆயிரக்கணக் கான வருஷங்கள் ஒருவன் ஜீவித்திருக்க முடியாதென்பது அவ ருடைய சொந்த ஊகம். நெல்லிக்கனிகளை இரண்டு அவுன்சு அளவு உபயோகித்தது சாஸ்திரக்கொள்கைக்குப் பொருந்தாது. இன்னும் அதிக அளவில் அவைகளை உபயோகித்திருக்கவேண்டும். "ஆமல கானி திருப்த்யா காதேத்" என்ற வசனத்திற்கு வெந்த நெல்லிக்கனி களை வயிறு நிறைய சாப்பிடவேண்டுமென்பது பொருள். இரண்டு அவுன்சு என்பது ஐந்துதோலா எடையாகின்றது. இது "திருப்த் யா" என்ற சொல்லுக்குத்தகுந்த எடையாகமாட்டாது. இன்னும் இம்முறையில் பலகுறையிருந்ததால் மாளவியா அவர்களுக்குப்பூர்ண பலன் கிடைக்காமல் போயிற்று. இம்முறையும் இதுபோன்ற மற்ற முறைகளும் பலரும் அனுஷ்டிக்கக்கூடியவைகளே. வடதேசத்தில்

பலர் அனுஷ்டிப்பதாக அறிகிறோம். ஆனால் நம் தமிழ் நாட்டில் யாரும் அனுஷ்டித்ததாகத் தெரியவில்லை. மாளவியா அவர்கள் இச் சிகித்சை பெற்றபிறகு அவரை நேரில் பார்த்த ஒரு நிருபர் எழுதுவ தாவது—

"மாளவியா அவர்களுக்கு காயகல்பம் செய்துகொடுத்த பாவாஜி அவர்கள் காயகல்பத்தை மூன்றுமுறை தன் விஷயத்திலே உபயோ கித்திருக்கின்றார்கள். தத்காலம் பாவாஜி அவர்களுக்கு வயது 172. மாளவியா அவர்கள் 1938ஞ ஜனவரிமீ 16உ கங்கைநதிக்கரையி லுள்ள ஓர் பங்களாவில் ஓர் இருட்டறையில் இறுத்தப்பட்டார். அது கர்ப்பவாஸம்போன்று இருந்தது. காற்று, வெய்யில், வெளிச்சம், இவை சற்றும் அவ்வறையில் கிடையாது. அவ்வறையில் பிரவே சித்து இரண்டு நாள்களுக்குப்பிறகு மாளவியா அவர்களுக்குப் பகல், ராத்திரி என்ற பேதமே இல்லாமல் போய்விட்டது. பல நாழிகை அவர் பகலில் தூங்குவார். இரவில் பிற்பகுதியில் எழுந்திருந்து தியானம் செய்வார். நெய் விளக்கில் படிப்பார். அவருக்குப்பால் தான் ஆகாரம். நெல்லிக்கனி, நெய், தேன், இவைகளை உபயோ கித்தார். காலையிலும் சாயங்காலத்திலும் காயகல்ப மருந்தைச்சாப் பிட்டு வந்தார். மருந்தின் விலை சுவல்பமே. ஆனால் முப்பதுமைல் தூரத்திலுள்ள ஓர் அரண்யத்தில் அதைத்தயாரிப்பது கடினமாக இருந்தது. ஒரு புரசமரமும் சில மணு பசும்சாண எருவும் ஒரு நாள் மருந்தைத்தயாரிக்கப்போது மானதாயிருந்தது. பிப்ரவரிமீ 28உ யன்று மாளவியா அவர்கள் சிகித்சை பூர்த்தியாகி வெளியில் வந்தார்கள்.

மாளவியா அவர்களின் சரீர ஆரோக்யத்தில் இச்சிகித்சையால் உண்டான மாறுபாடுகள் மிகவும் ஆச்சரியமாகவிருந்தன. அவர் நெற்றியில் இருந்த மடிப்புகள் பூர்ணமாக மறைந்துவிட்டன. பற் களின் அடியில் உள்ள எகிர்கள் கெட்டியாக ஆகிவிட்டன. அவர் முகம் புஷ்டியாகவும் பிரஸன்னமாகவும் இருந்தது. தத்காலம் அவர்கள் அரையில் அதிகம் உலாவுகின்றார். 1937ஞ டிசம்பர்மீ 14உ அவர்கள் அலகாபாத் யூனிவர்சிடியில் கான்வகேஷன் அட்ரஸ் செய்யும்பொழுது கூன் விழுந்த இளைத்த சரீரத்துடன் அவர்கள்

இருந்த நிலைமையுடன் இப்பொழுது உள்ள நிலைமையை ஒத்திட்டுப் பார்க்கவேண்டும். காயகல்பம் ஆரம்பிப்பதற்கு முந்திப் பொது ஜனங்கள் முன்னிலையில் அவர் செய்த கடைசி உபன்யாசம் இது. இந்த உபன்யாசம் செய்யும்பொழுது துவக்கத்தில் சில வார்த்தைகளை அவர் சொல்லிவிட்டு (நிற்க சக்தியில்லாமல்) தன் உபன்யாசத்தைச் செய்ய உடனே ஆசனத்தில் அமர்ந்தார். அக்காலத்தில் அவர்கள் சரீரம் அவ்வளவு தள்ளாத நிலைமையிலிருந்தது. காயகல்பம் செய்து கொண்ட பிறகு அவர் இன்று மீசை வெளுப்பாக விருந்தாலும் 60 வயதுக்குக் குறைந்தவராகவே காணப்படுகிறார். மாளவியா அவர்கள் சரீரத்தில் இவ்விதம் காணும் மாறுபாட்டிற்குக் காரணம் தபஸி பாவா அவர்களே. பாவா அவர்கள் மூன்று முறை தானே காயகல்பம் சாப்பிட்டிருக்கின்றார். முதல் பர்மா சண்டை நடந்துவந்த காலத்தில் அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள பரசுராம குண்டம் என்ற இடத்தில் தன் 75 ஆவது வயதில் முதல் தடவை காயகல்பம் சாப்பிட்டார். எடா ஜில்லாவில் பஸான் என்ற இடத்தில் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முந்தி இரண்டாவது தடவை காயகல்பம் சாப்பிட்டார். சுமார் மூன்று வருஷங்களுக்கு முந்தி மட்ரா ஜில்லாவைச் சேர்ந்த கோட்பான் என்ற இடத்தில் மூன்றாவது தடவை காயகல்பம் செய்துகொண்டார். மூன்றாவது தடவை காயகல்பம் சாப்பிடும் பொழுது சுவாமி கிருஷ்ண தாஸ் என்பவர் பணிவிடை செய்து வந்தார். ஆகவே காயகல்ப ரகசியத்தை அவருக்குச் சொல்லிக்கொடுத்தார். மூன்றாவது தடவை காயகல்பம் உபயோகிப்பதற்குமுன்பாவாஜி அவர்கள் மிகவும் வயது தளர்ந்தவராகக்காணப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். தற்காலம் அவருடைய தடித்த தேகமும் வசீகரப்பார்வையும் 45 வயதிற்குமேல் அவருடைய வயதை யாரும் மதிக்கமுடியாத படி செய்கின்றன. பாவாஜி அவர்கள் சுபாவத்தால் மெதுவாகவும் சுவல்பமாகவும்பேசுகின்றார். மாளவியா அவர்கள் காயகல்பம் ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள் பொது ஜனங்கள் சிகித்சைக்காக அவரைச் சுற்றி ஏராளமாகக் கூட ஆரம்பித்து விட்டனர். மாளவியா அவர்களின் காயகல்பத்திற்கு நான்கு மூலிகைகள் தேவையாக விருந்தன. அம் மூலிகைகள் வருஷத்தின் சில மாதங்களிலேயே காணக்கூடியவை

யாதலால் அவைகளைத் தேடிக்கொண்டு வருவதில் தான் சிரமமும் செலவும் ஏற்பட்டது. அவைகளைக் கொண்டுவந்து உலர்த்திப்பொடி செய்யவேண்டியதாயிருந்தது. பலாசமரத்தைக் குடைந்து அந்த சந்தில் நெல்லிக்கனிகளைப் போடும்போது இந்தப் பொடியை நெடி கனிகளுக்குப் பூசி போடுவார். பிறகு மரத்திற்கு நான்கு பக்கத்திலும் எருக்களை அடுக்கித் தீயிடவேண்டும். சில மணி காலம் எரிந்தால் மருந்து பதமாகி விடுகிறது.

பாவாஜி அவர்களுக்குப் பல்வித காயகல்ப மருந்துகள் தெரியும். அவைகளில் பலாசமும் நெல்லிக்கனியும் நான்கு முறைகளில் சேருகின்றன. சில குறிப்பிட்ட காயகல்பங்களை உபயோகித்தால் புது பற்களும் கருத்த மயிரும் உண்டாகுமாம். தளர்ச்சியை விலக்கி இளம் வயதை உண்டுபண்ணுவது என்பது எல்லா காயகல்பங்களுக்கும் பொதுவான குணமாகும். ஒரு நாளிலிருந்து ஒரு வருஷம் முடியும் வரை அனுஷ்டிக்கும்படி பல விதமான காயகல்பங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒரே நாளில் அனுஷ்டிக்கக் கூடிய காய கல்பம் மிகக் கடினமானது. இக்காயகல்பம் சாப்பிட்டவுடன் உடம்பு வீங்கி சரீரத்திலுள்ள ஆறு தோல்களும் உரிந்து விழுந்து ஏழாவது தோலே முதல் தோலாகி ஆறு புதிய தோல்கள் உண்டாகின்றனவாம். மாளவியா அவர்களுடன் காயகல்பம் சாப்பிட்ட பண்டிட் ஹரதத்த சாஸ்திரிகள் அவர்கள் 62 வயதுள்ளவர் தற்காலம் வாலிபராகக் காணப்படுகிறார். காயகல்பத்தால் இவ்விருவர்களுக்கும் கண் பார்வை சீர்பட்டிருக்கின்றது. மாளவியா அவர்களுக்கு வெகு நாளாக விருந்த காது நோய் நீங்கிவிட்டது. சாஸ்திரிகள் அவர்கள் மாளவியா அவர்களைக் காட்டிலும் அதிக பலனைப் பெற்றிருக்கிறார்."

இவ்விதம் மாளவியா அவர்களும், அவர்களை நேரில் பார்த்த ஓர் நிருபரும் எழுதியுள்ள முற்கூறிய வியாசங்கள் பொதுஜனங்களுக்கு ரஸாயன முறைகளில் புதிய உணர்ச்சியை யளிப்பதாகவிருக்கின்றது. இம்முறைகளை ஒழுங்காகச் செய்து வைக்கும் சக்தி வாய்ந்த சுதேச வைத்யர்கள் நம் தக்ஷிண தேசத்தில் பலரிருந்தும் போதிய ஊக்க மில்லாலிருப்பது வருந்தத்தக்கது. நெல்லிக்கனிகளில் புளிப்பு இருப்பதால் அது ரஸாயனமாக மாட்டாதென்று மதுரையில் சிலர்

நினைத்ததுண்டு. மாளவியா அவர்களின் உதாஹரணத்திற்குப்பிறகு இத்துயுக்திகள் சற்றும் பயன் படா. திரவியங்களில் நமது யுக்திகளுக்கு உட்படாமல் அமைந்துள்ள ப்ரபாவம் என்ற ஓர் சக்தி அபூர்வகுணங்களை யளிப்பதாக நமது நூல்கள் கூறுகின்றன. நெல்லிக்கனிகளில் அமைந்துள்ள பிரபாவம் என்ற சக்தி புளிப்பு ரசம் முதலியவைகளை யடக்கி அபூர்வகுணமாகிய வாலிபத் தன்மையை யளிக்கவல்லது என்பது மறுக்கமுடியாத தத்வமாகும்.

## சுதேச வைத்யம் பூர்ணமானதா?

(பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

சுதேச வைத்யம் பூர்ணமானதா அல்லது வேறு வைத்ய முறைகளின் சகாயத்தைத் தேடுகிறதா என்ற ஓர் பிரச்னை வெகு நாளாக விவாதிக்கப்படுகின்றது. பிறவைத்யங்களின் சகாயமின்றி சுதேச வைத்யத்தை மாத்திரம் அப்பியசித்தால் அது தேவைக்குப் போதுமானதாக விராது என்றும் ஆகவே சென்னை அரசாங்கத்திலும் சுதேச வைத்ய பாடசாலையில் ஆங்கில வைத்யமும் சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றதென்றும் சிலர் வாதிக்கின்றனர். சஸ்திர சிகித்சைக்கு ஆங்கில வைத்யமே சரணாகவிருப்பதால் தனித்து சுதேச முறையால் சமாளிக்க முடியாத பல நோய்கள் இருப்பதாக இன்னும் சிலர் நினைக்கின்றனர். ஒவ்வொரு வைத்யத்திலும் குறைகள் இருப்பதால் எந்த முறையும் பூர்ணமான தல்லவென்றும் ஆகவே எல்லா முறைகளையும் ஒன்று சேர்த்துப் பயின்றாலல்லது தத்காலத்தேவைக்குப் போதாதென்று சிலர் சொல்லுகின்றனர். ஹைதராபாத்தைச் சேர்ந்த டாக்டர் S. R. M. நாயுடு அவர்கள் கடைசி இனத்தைச் சேர்ந்தவர். அவர் சொல்லுவதாவது—"இந்திய தேசம் பல வர்ணங்கள், ஜாதிகள், வகுப்புகள், மதங்கள் அடங்கிய பெரிய தேசமாகும். பலவித வைத்யங்கள் அனுஷ்டிக்கப்படும் தேசமாகும். மிகப்பழைமையான ஆயுர்வேதமுறை, யூநானிமுறை, இவைகள் நெருக்கமாக அனுஷ்டிக்கப் படுவதுடன் ஆங்கில வைத்யம் ஹோமியோபதி பையோ கெமிஸ்டிரி என்ற முறைகளும் இத்தேசத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றன. தனித்தனியாகப் பார்க்குப்பொழுது முன் சொன்ன ஐந்து முறைகளும் அத்புதமானவைகளே. ஆனால் அவை தத்காலம் நோயால் வருந்தும் ஜனங்களின் தேவைக்குத்தனித்

தனியாக போதுமானவைகளாக இருக்கவில்லை. இந்த இருபதாவது நூற்றாண்டில் கூட உயர்ந்த தொழிலாகிய வைத்யத்தொழிலில் முன் சொல்லிய முறைகளில் பரஸ்பரம் பொறாமையும் போட்டியும் இருப்பது துரதிருஷ்டவசமாகும். இந்துக்கள் வகுப்பு வித்தியாசங்களை அனுஷ்டிப்பது போல முன் சொல்லிய இந்த ஐந்து வித வைத்தியர்களும் தங்கள் தங்கள் முறைகளே உயர்ந்ததெனவும் மற்ற முறைகள் தாழ்ந்தவையெனவும் சொல்லிக்கொண்டு பிடித்தபிடி விடாமல் வகுப்புவாதம் செய்துகொண்டு வருவதைப் பார்க்க வருத்தமாகவிருக்கிறது. அதிக வருவாயுள்ளதும் ஆதரவுபெற்றதும் நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருவதாயுமுள்ள முறையைக் (ஆங்கில முறையை) கையாளும் வைத்தியர்கள் மனதில் இவ்வகுப்பவாத விஷம் புகுந்து தாங்கள் எல்லாரையும் விட உயர்ந்தவர்கள் என்றும் மற்ற வைத்திய முறைகளைக் கையாளும் வைத்தியர்கள் தாழ்ந்தவர்களென்றும் மனதில் பதியும்படி செய்துவருகிறது.

இந்தியாவில் தற்காலம் அனுஷ்டிக்கப்படும் முன்சொன்ன ஐந்து முறைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஆயுர்வேதமானது மிகப்பழமையானதென நாம் அறிந்துள்ள வைத்யமுறைகளில் ஒன்று. அது யஜுர்வேதத்தை ஆதாரமாகக்கொண்டது. தென் தேசத்தில் பங்காளத்திலிருந்து சென்னை வரையில் இது வெகுநாளாக அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. புதிய மருந்துகளைக் கையாள ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் ஜீவராசிகளுடைய பிணிகளை நீக்கப் புதிய முறைகளையும் எடுத்துக்கொள்ளும்படியும் சரகமஹர்ஷிதன் நூலில் ஓர் இடத்தில் கூறியுள்ளார். சிகிச்சைத்துறையில் மிகவும் ஜீவகாருண்யத்துடனும் தாராள நோக்கத்துடனும் ஆயுர்வேதம் அமைந்திருப்பதாக உலகம் முழுவதும் போற்றுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம். கிரீஸ் தேசத்திலிருந்து ஈஜிப்ட் வழியாக வெளிவந்த அறிவை ஆதாரமாகக் கொண்டது யூநானி முறை. இம்முறை தென்இந்தியாவைக்காட்டிலும் வட இந்தியாவில் அதிகமாகக் கையாளப்படுகிறது. ஆங்கிலமுறை மேல் நாட்டில் சீர்மை பெற்று ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் வரும்பொழுது இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது. இம்முறையை அப்பியசித்த மிஷனரிகளும் இம்முறையை

இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர். தத்காலம் ஆங்கில முறைதான் இந்தியாவில் விஸ்தாரமாகக் கையாளப்படுகின்றது. ஏனெனில் இம் முறை அரசாங்க ஆதரவைப் பெற்றிருப்பதுடன் இம்முறையால் அத்புதமாக குணமடைந்த பொதுஜனங்களுடைய நம்பிக்கையையும் இதுபெற்றிருக்கின்றது. ஹோமியோபதி என்பது டாக்டர் சாமுயல் ஹன்னிமன் (ஜர்மனியைச் சேர்ந்தவர்) என்பவரால் கண்டுபிடிக்கப் பட்ட முறை. இம்முறை "ஸிமிலியா ஸிமிலிபஸ் க்யூரேடம்" என்ற தத்வத்தை யொட்டியது. இந்த டாக்டர் M. D. என்றபட்டத்தைப் பெற்றவர். ஆங்கில வைத்யத்தைக் கையாண்டு வந்த இவர் ஆங்கில வைத்யத்தால் உண்டாகும் குணங்களில் திருப்தியடையாமல் உடனே குணமளிப்பதாயும் சிலவு குறைவாயும் உள்ளஓர் முறையைக் கண்டுபிடிக்க முயற்சித்தார். இவர் கண்டுபிடித்த ஹோமியோபதி என்ற முறையில் மருந்துகளை அதிக அளவில் உட்கொண்டால் எந்த பிணிகள் ஆரோக்யமுள்ள ஒருவனுக்கு உண்டாகுமோ அப் பிணியுள்ளவனுக்கு அம்மருந்தைக் கொடுத்தால் அப்பிணி நீங்கு மென்பது கொள்கை. உதாஹரணமாக—இபிகாகுவானு என்ற மூலிகையை அதிக அளவில் ஓர் ஆரோக்யமுள்ளவனுக்குக் கொடுத் தால் அது வாந்தி முதலியவைகளை யுண்டுபண்ணும். ஆகையால் அந்த மருந்தை வாந்தி நோயுள்ளவனுக்குச் சிறிய அளவில் கொடுத்தால் வாந்தியை நிறுத்துகின்றது. ஆங்கில முறைகளிலும் மற்ற முறைகளிலும் உபயோகிக்கப்படும் மூலிகை முதலியவைகளி லிருந்தே ஹோமியோபதி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. அவ் விதமிருந்தும் செய்முறைகளிலும் உபயோகிக்கும் ரீதிகளிலும் இம் முறைகளுக்குள் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. ஆங்கிலவைத்யத்தை விட ஹோமியோபதி முறையில் சில விசேஷ அனுகூலங்களிருப்பதை நாம் ஒப்புக்கொண்டே யாகவேண்டும். அவையாவன—(1) ஹோமியோபதி மருந்துகள் விசேஷ சக்தி வாய்ந்தவையாக விருக்கின்றன. (2) தகுந்த மருந்துகளைப் பொருக்கி உபயோகித் தால் மந்திரம்போல் அத்புதமாக குணம் கொடுக்கின்றன. (3) அவைகளில் விஷத்தன்மை யில்லாததால் வைத்யரல்லாதார்கூட வீட்டி மருந்துகளை உபயோகிக்கலாம். (4) ஆங்கில மருந்துகள் போல அவை கெட்டகுணங்களைக் கொடுப்பதில்லை. (5) இம்

மருந்துகள் விசேஷ சக்தி வாய்ந்தவைகளாக விருப்பதுடன் ஏழைகளுக்கும் கிட்டும்படி சுவல்ப சிலவில் கிடைக்கின்றன.

பையோ கெமிக்கல் முறை என்பது M. D. பட்டம் பெற்ற டாக்டர் ஷூஸ்லர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. சரீரத்திற்கு மிகவும் தேவையான சில உப்புகளைக் கொண்டு இம்முறையில் சிகித்சை செய்யப்படுகிறது. இம்முறையை ஆங்கிலவைத்யர்கள் அனைவரும் வரவேற்றனர். டாக்டர் ஷூஸ்லர் அவர்கள் இம் முறையால் விசேஷ பலனையும் பிரக்யாதியையும் அடைந்ததால் இம் முறையை ஆக்ஷேபமின்றி அனைவரும் உடனே அங்கீகரித்தனர். தத்காலம் ஆங்கிலர்கள் அனுஷ்டிக்கும் பெரும்பான்மையான இன்ஜக் ஷன் மருந்துகளும் மற்றவைகளும் முற்றிலும் பையோ கெமிகலைச் சேர்ந்தவைகளே.

நாம் முன் சொன்னதுபோல எந்த முறையும் பூர்ணமாக விருக்கவில்லை. ஆகவே தத்காலமுள்ள முன் சொன்ன ஐந்து முறை களையும் ஒன்று சேர்த்துவிட வேண்டும். அதற்காக அந்தந்த முறைகளில் நிபுணத்வம் பெற்றவர் ஒன்று சேரவேண்டும். தங்கள் தங்கள் முறைகளிலுள்ள குறைகளைப்பட்ட வர்த்தனமாகச் சொல்ல வேண்டும். மற்ற முறைகளிலுள்ள குணங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்தால் மிகவும் பூர்ணமான ஓர் வைத்ய முறையை நாம் ஏற்படுத்தமுடியும். நாம் சொன்ன இந்தக் கொள்கை யைமிகவும் தேசாபிமானம் வாய்ந்த பலபெரியோர்கள் ஒப்புக்கொண் டிருக்கின்றனர். யூனானி வைத்தியத்தில் பேர்பெற்ற ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களும் ஆங்கில வைத்தியத்தில் அத்புத சக்தி பெற்ற டாக்டர் அன்சாரி அவர்களும் நம் கொள்கையை அங்கீகரித் திருந்தனர். வித்தியாசமான வெவ்வேறு முறைகளை இவர்கள் அனுஷ்டித்து வந்தபோதிலும் ஆயுள் பரியந்தம் சிநேகிதர்களாகவும் தேசசேவையில் ஈடுபட்டவர்களாகவுமிருந்தனர். இந்த இருவரும் மற்றவர் முறையின் மேன்மையை ஒப்புக்கொண்டும் அதில் கௌரவம் வைத்துமிருந்தனர். இவ்விருவர்களுடைய சேர்க்கையால் டில்லி நகரத்தில் “திபியா காலேஜ்” என்ற பெயருடன் வைத்தியக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு இரு முறைகளும் போதிக்கப்பட்டு வந்தன. தனித்தனியாக ஆங்கில பாடசாலையிலும் யூனானி பாட சாலையிலும் படித்துத் தேறும் மாணாக்கர்களை விட திபியா காலேஜில் படித்துத் தேறும் மாணவர்களுடைய அறிவு விசாலமாக விருந்தது. ஆகவே எல்லா முறைகளையும் ஒன்று சேர்த்து நடத்தும் காலேஜி லிருந்து தேறி வரும் மாணாக்கர்களுக்கு விசேஷ அறிவு கிடைக்கு மாதலால் என் கொள்கையைப் பலரும் ஆதரிக்கவேணுமாய்க் கோருகிறேன்.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஓர் ஒப்புயர்வற்ற மருந்தென்ச் சுதேச நூல்களில் கூறப்பட்டதாளக பஸ்மம் வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்றும் அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயருடன் வெகு காலமாக அனுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து க்ஷய நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 நாட்களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில மாதங்களுக்குள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 மாதங்களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்துடன் சுவர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகபலா லேகியத்தை அனுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | | |
|---|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து | விலை ரூ. | 10. |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை | ஷை விலை ரூ. | 20. |
| நாகபலா லேகியம் | ஷை | ஷை விலை ரூ. | 5. |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இரண்டு வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணெ, பாதாம்பருப்பு, சாரப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகக் கூடிய காய்கறிகள் முதலியன புஷ்டியாகச்சேர்த்துக் கொள்ளவும். சற்று காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்ற பிறகு தைல ஸ்நானம் செய்யலாம்.

விலாசம்:—

பண்டிட் நாராயண அய்யங்கார்,
2, கீர் போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.

Registered No. M. 4018.

*Prescribe:—*

# AURVEDIC TINCTURES

## For

## National Health & Wealth.

**The Greatest Advance in the History of**

**Indian Medicine.**

Over 300 Varieties of Simple Compound and Special Tinctures available to select from. Oper formulae.

**Awarded**

Gold Medals, Certificates of Merit and heaps of testimonials. Recognised by all Members of the All-India Ayurvedic Unani Conference.

Stockists wanted everywhere.

**The Ayurvedic Compound Tintures Ltd.,**

**Trivandram.**